

கவிதை : பனிக்கால அந்திமாலையில் அடர்ந்த வனத்தில் நின்ற பொழுதில் ......

Written by - ராபர்ட் பிராஸ்ட் | தமிழ் மொழியாக்கம் - முனைவர் ஆர். தாரணி -
Tuesday, 17 October 2017 16:58 - Last Updated Tuesday, 17 October 2017 17:09

STOPPING BY WOODS
ON A SNOWY
EVENING
BY
ROBERT FROST

யாருடைய வளர்ப்பு வனமோ இவை யான் அறிகிலனே
தூரத்தே தெரியும் சிறுகிராமத்தில் அவரின் வசிப்பிடம் இருக்கக்கூடும்:
அவர் அறிந்திருக்க வாய்ப்பில்லை, இங்கே நான்
அவரின் எழில் வனம் முழுதும் பனியில் நனைந்து நிரப்புவதை ரசிக்கிறேன் என்பதை

எனது சின்னஞ்சிறு புரவிக்கு விந்தையாய் தோன்றியிருக்கக்கூடும்
அருகில் பண்ணைவீடு ஒன்றும் காணப்படாமல்
உறைந்த பனிநிறை ஏரிக்கும், அடர் வனத்திற்கும் இடையே
ஆண்டின் அப்பருவக்காலத்தின் காரிருள் சூழ
அந்தி மாலைவேளையில் அக்கணம் அங்கே நான் நிற்பது.

தனது தலையை அசைத்து, கழுத்தில் உள்ள கிண்கிணி மணியின் நாதம் எழுப்பி
ஏதேனும் பிழை நேர்ந்ததா என அவன் என்னை மறைமுகமாய் வினவுகிறான்.
அதுவன்றி, அங்கே மெல்லிய பனிக்காற்றின் சுகமான ஓசையும்,
மெல்லிறகுகளாய் வீழும் பனித்துகள்களின் சீரான ஒலியும் மட்டுமே எங்கும்
நிறைந்திருக்கின்றத.

ஆழ்ந்த ரகசியத்தை உள்ளடக்கி. அடர்ந்த காரிருளில் அந்த வனம் மனம்கவர் ரமணீயமாய் அங்கே நிலைத்திருக்கிறது. ஆனால், நிறைவேற்றப்படவேண்டிய என்னுடைய

1 / 2

கவிதை : பனிக்கால அந்திமாலையில் அடர்ந்த வனத்தில் நின்ற பொழுதில் ......

Written by - ராபர்ட் பிராஸ்ட் | தமிழ் மொழியாக்கம் - முனைவர் ஆர். தாரணி -
Tuesday, 17 October 2017 16:58 - Last Updated Tuesday, 17 October 2017 17:09

வாக்குறுதிகள் எனக்காய் காத்திருக்கின்றன.
அதனால் நான் உறங்குமுன் பயணப்பட வேண்டிய தொலைவும் மிக அதிகம்
அதனால் நான் உறங்குமுன் பயணப்பட வேண்டிய தொலைவும் மிக அதிகம்.

Stopping by Woods on a Snowy Evening By Robert Frost

Whose woods these are I think I know.
His house is in the village though;
He will not see me stopping here
To watch his woods fill up with snow.

My little horse must think it queer
To stop without a farmhouse near
Between the woods and frozen lake
The darkest evening of the year.

He gives his harness bells a shake
To ask if there is some mistake.
The only other sound’s the sweep
Of easy wind and downy flake.

The woods are lovely, dark and deep,
But I have promises to keep,
And miles to go before I sleep,
And miles to go before I sleep.

akilmohanrs@yahoo.co.in

2 / 2